

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதுதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி சிவா எம்.பி. தலைமையில் கழக மாநிலங்களவை உறுப்பினர்கள் பச்சை துண்டு அணிந்து போராட்டம் நடத்தினர்.இதில் தே.மு.தி.க. எம்.பி. எல்.கே. சுதீஷ், மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்றனர்.

### நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் – கடந்த 3 ஆண்டுகளில்

# தமிழ்நாட்டின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரிப்பு!

### மக்களவையில் கழக உறுப்பினர்கள் - க.செல்வம் - ராணி ஸ்ரீகுமார் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!





புதுடெல்லி, ஜூலை 23-

கடந்த 3 ஆண்டுகளில் நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு தொடர்ந்து அதிகரித்துள்ளதாக தி.மு.க. மக்களவை உறுப்பினர்கள் க. செல்வம் மற்றும் திருமதி. டாக்டர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 2024 இல் 9.89% லிருந்து 2026 இல் 13.35% ஆக உயர்ந்துள்ளது என அவர் பதிலளித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்தப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பை அரசு மதிப்பீடு செய்துள்ளதா, ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன; கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில், வாகனங்கள், ஜவுளி, எலக்ட்ரானிக்ஸ், தோல்பொருட்கள் மற்றும் பொறியியல் பொருட்கள் உட்பட இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் துறைவாரியாக தமிழகத்தின் பங்கு என்ன; நாட்டின் முன்னணி ஏற்றுமதி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உருவெடுத்துள்ளதா, ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன.? என கேள்வி எழுப்பினர்.

#### கழக ஆட்சியில் 13.35 சதவீதம் உயர்வு!

மோட்டார் வாகனங்கள்/கார்கள், ஜவுளி மற்றும் அதன் சார்ந்த பொருட்கள், எலக்ட்ரானிக்ஸ், தோல் மற்றும் தோல் பொருட்கள் மற்றும் பொறியியல் பொருட்கள் உட்பட நாட்டின் ஒட்டு மொத்தப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு, கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் துறைவாரியாக இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு உயர்ந்துள்ளது.

#### ஏற்றுமதியை வலுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன?

தமிழகத்தின் ஏற்றுமதிப் போட்டித் திறனை அதிகரிப்பதற்காக ஏற்றுமதி உட்கட்டமைப்பு, தளவாடங்கள் (logistics), துறைமுகங்கள், தொழில்துறை நடைபாதைகள் மற்றும் தொழிலை எளிதாகச் செய்வதற்கான சூழல் (ease of doing business) ஆகியவற்றை வலுப்படுத்த அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன.? என எழுப்பிய கேள்விக்கு,

ஏற்றுமதிப் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காக, தமிழகம் உட்பட நாடு முழுவதும் ஏற்றுமதி உள்கட்டமைப்பு, தளவாடங்கள், துறைமுகங்கள், தொழில்துறை நடைபாதைகள் மற்றும் எளிதாகத் தொழில் செய்வதற்கான சூழல் ஆகியவற்றை வலுப்படுத்த அரசு பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டம் (TIES), தேசிய தளவாடக் கொள்கை 2022, தேசிய தொழில் நடைபாதை மேம்பாட்டுத் திட்டத்தின் (NICDP) கீழ் தொழிற்பாதைகளை உருவாக்குதல், சாகர் மாலா திட்டத்தின் கீழ் துறைமுக நவீனமயமாக்கல், தொழில் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்கள், தேசிய ஒற்றை சாளர அமைப்பு (NSWS), பிஎம் கதி சக்தி தேசிய பெருந்திட்டம், ஸ்டார்ட்அப் இந்தியா திட்டம் மூலம் புதிய நிறுவனங்களை ஆதரித்தல் மற்றும் ஜன விஷ்வாஸ் (திருத்த) சட்டத்தின் மூலம் பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றவியல் நடவடிக்கைகளை நீக்குதல் ஆகியவை அடங்கும்.

அவற்றின் விவரங்கள் வருமாறு:

i. ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ், தமிழ்நாடு மாநிலத்தில் 13 திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ii. ஒருங்கிணைந்த, செலவு குறைந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தளவாட சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க, தேசிய தளவாடக் கொள்கை (NLP) 2022 க்கு இணங்கத் தங்கள் மாநிலத் தளவாடக் கொள்கையை வடிவமைக்கத் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன.

iii. உற்பத்தியில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக, இந்திய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து தேசிய தொழில் நடைபாதை மேம்பாட்டுத் திட்டத்தின் (NICDP) கீழ் தொழிற்பாதைகளை உருவாக்கும் உத்தியை ஏற்றுக்கொண்டுள்ளது. புதிய தொழில்துறை உள்கட்டமைப்பை (Greenfield Industrial Infrastructure) மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

#### பல்வேறு நிலைகளில் நிதியுதவி – ஆதரவு!

iv. துறைமுகங்களில் ஏற்றுமதி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, நிதி ஆண்டு 201415 முதல் நிதி ஆண்டு 202526 வரை தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்களில் ரூ. 12,523 கோடி மதிப்பிலான மொத்தம் 94 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

v. தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் தொழிலை எளிதாகச் செய்வதற்கான (EoDB) சூழலை மேம்படுத்த அரசு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், இணக்கச் சுமையைக் குறைக்கும் (RCB) முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, தமிழ்நாடு மாநிலத்தில் 2,521 இணக்கச் சுமைகள் குறைக்கப் பட்டுள்ளன.

vi. நாட்டில் முதலீட்டாளர்கள் சார்ந்த ஒப்புதல்கள் மற்றும் சேவைகளுக்கான ஒரே மையமாக தேசிய ஒற்றை சாளர அமைப்பு (NSWS) உருவாக்கப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு முழுமையான உதவிகளை வழங்குகிறது.

vii. பலதரப்பட்ட உள்கட்டமைப்புகளின் ஒருங்கிணைந்த திட்டமிடல் தொடர்பான தரவு முடிவுகளை எளிதாக்கவும், அதனால் தளவாடச் செலவைக் குறைக்கவும் பிஎம் கதி சக்தி தேசிய பெருந் திட்டம் (NMP) தொடங்கப் பட்டது.

viii. ஸ்டார்ட்அப் இந்தியா முயற்சியின் கீழ், தொழிலின் பல்வேறு நிலைகளில் நிதியுதவி மற்றும் ஆதரவை வழங்க, ஃபண்ட் ஆஃப் ஃபண்ட்ஸ் ஃபார் ஸ்டார்ட்அப்ஸ் (FFS), ஸ்டார்ட்அப் இந்தியா சீட் ஃபண்ட் திட்டம் (SISFS) மற்றும் ஸ்டார்ட்அப்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம் (CGSS) ஆகிய முதன்மைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது என அமைச்சர் பதிலளித்தார்..

#### தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை என்ன?

இக்காலகட்டத்தில் தமிழகத்தில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSMEs) வழங்கப்பட்ட மத்திய உதவி, சலுகைகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களின் விவரங்கள் என்ன? என்று எழுப்பிய கேள்விக்கு பதலளித்த அமைச்சர்,

கடன் வசதி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆகிய பகுதிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSMEs) ஆதரவளிக்க நாடு முழுவதும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இதில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP), குறு மற்றும் சிறு தொழில்கள் கொத்து மேம்பாட்டுத் திட்டம் (MSECDP), குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம் (CGTMSE), சுயமாகச் சார்ந்திருக்கும் இந்தியா (SRI) நிதி, தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ESDP) மற்றும் MSME சாம்பியன்ஸ் திட்டம் ஆகியவை அடங்கும். மேலும், MSMEகளின் மேம்பாட்டிற்கு உகந்த சூழலை உருவாக்க, ஆன்லைன், காகிதமற்ற மற்றும் வெளிப்படையான பதிவை வழங்க 'உத்யம் பதிவு இணையதளம்' (Udyam Registration Portal) உருவாக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் MSMEகளுக்கு வழங்கப் பட்ட மத்திய உதவி, சலுகைகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

i. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் உட்பட EPMக்காக 202627 ஆம் ஆண்டில் ரூ. 2,300 கோடி நிதிய ஒதுக்கீட்டுடன் இந்தியாவின் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை வலுப்படுத்த 2025ல் ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கம் (EPM) தொடங்கப்பட்டது.

ii. ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலதனப் பொருட்கள் (EPCG) திட்டம், ஏற்றுமதிக்கான பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்காகப் பூஜ்ஜிய சுங்க வரியில் மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது. இத்திட்டம் இந்திய ஏற்றுமதியாளர்களின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்திப் போட்டித்தன்மைக்கு ஆதரவளிக்கிறது.

iii. மாவட்ட ஏற்றுமதி மையம் (DEH) முயற்சி, பரவலாக்கப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கான மாவட்ட அளவிலான கட்டமைப்பை வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், இலக்கு சார்ந்த தலையீடுகளுக்காக ஏற்றுமதி சாத்தியக்கூறுகள் உள்ள 35 பொருட்கள்/சேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

iv. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரிகள் மற்றும் கட்டணங்கள் தள்ளுபடி (RODTEP) திட்டம், ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான முந்தைய கட்ட மறைமுக வரிகள் உட்பட, தற்போது திரும்பப் பெறப்படாத வரிகள்/கட்டணங்களைத் திரும்பப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

v. முன்பண அனுமதிச் சான்று (Advance Authorisation) திட்டம், ஏற்றுமதிப் பொருளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளை வரி இல்லாமல் இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது. தமிழ்நாடு உட்பட அனைத்து MSMEகளும் இந்த வரி விலக்கு நன்மைகளைப் பெறலாம்.

#### கடன் காப்பீட்டுப் பாதுகாப்பு!

vi. இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கழகம் (ECGC), வர்த்தக மற்றும் அரசியல் காரணங்களால் வெளிநாட்டு வாங்குபவர்களால் பணம் செலுத்தப்படாத அபாயத்திற்கு எதிராக ஏற்றுமதியாளர்களுக்குக் கடன் காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குகிறது. இந்நிறுவனம் சென்னை, சென்னை தெற்கு, கோயம்புத்தூர், கரூர், மதுரை, சேலம், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய தமிழ்நாட்டின் 8 கிளைகள் உட்பட இந்தியா முழுவதும் 46 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

vii. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், MSMEகள் தங்கள் பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதில் தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்கும் நோக்கில், தமிழ்நாட்டில் உள்ள 04 மையங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள தனது கள அலுவலகங்களில் 65 ஏற்றுமதி வசதி மையங்களை (EFCs) நிறுவியுள்ளது.

viii. MSME அமைச்சகத்தின் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டம் (IC Scheme), வெளிநாடுகளில் நடைபெறும் சர்வதேசக் கண்காட்சிகள்/ கருத்தரங்குகள்/ வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்புகளில் பங்கேற்பதை எளிதாக்குவதன் மூலமும் பல்வேறு செலவுகளைத் திரும்ப வழங்குவதன் மூலமும் MSMEகளின் திறனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 202324 முதல் மே 31, 2026 வரை பயனடைந்த MSMEகளின் எண்ணிக்கை 85 ஆகும், மேலும் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2.18 கோடியாகும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

---

இதுவரை ரூ.6 கோடியே 51 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 51 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 22-07-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | சொ.வெங்கடாசலம், துப்பாக்குடி, திருநெல்வேலி மேற்கு மாவட்டம். | 25,000/– |
| 2. | எம். முகமது இக்லாஸ், ஸ்வர்ணாம்பிகை நகர், விருகம்பாக்கம், சென்னை – 92. | 25,000/– |
| 3. | ஆர். ராயப்பன், கோடதாசனூர், காரமடை, கோவை மாவட்டம். | 25,000/– |
| 4. | என்.சுதந்திரபாண்டியன், 5வது வார்டு, அல்லி நகரம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 5. | சா.செல்வராசன், பாளையம் பேரூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல் மாவட்டம். | 25,000/– |
| 6. | வே.ராஜ், 11வது வார்டு, இலஞ்சி பேரூர், தென்காசி மாவட்டம். | 25,000/– |
| 7. | வண்ணை மோகன், வ.உ.சி.நகர், தண்டையார்பேட்டை, சென்னை – 81. | 25,000/– |
| 8. | வெ.நல்லையா, பேரண்டூர் அஞ்சல், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

### மாநில அவைத் தலைவர் இராமலிங்கம் தலைமையில்

# ஆந்திர மாநில தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாநில அமைப்பாளர் கே.எம்.மூர்த்தி அறிக்கை!



ஐதராபாத், ஜூலை.23-

ஆந்திர மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.எம். மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஆந்திர மாநில தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் வரும் 26.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு நகரி பைபாஸ் கணபதி ரங்கா திருமண மண்டபத்தில் நடைபெறும்.

ஆந்திர மாநில தி.மு.க. அவைத்தலைவர் இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வகிக்கிறார்.

மாநில நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி, நெசவாளர் அணி, இலக்கிய அணி, மகளிர் அணி, விவசாய அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, தொழில் சங்க அணி புள் மற்றும் கிளை கழக செயலாளர்கள், மாநில பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கி றோம்.

**பொருள்:** ஆந்திர மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் மற்றும் இளைஞர் அணி உறுப்பினர் படிவம் புதுப்பித்தல்.

ஆந்திர மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த அணிகள் அனைத்தும் புதுப்பிக்கப் படுகிறது.

இவ்வாறு ஆந்திர மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.எம்.மூர்த்தி தெரிவித்துள்ளார்.



சூலூர் பேரூர் கழகத்தின் சார்பில் பல்லடம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், சூலூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் எஸ்.எஸ்.பொன்முடி அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி மாபெரும் இலவச மருத்துவ முகாமை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், ஒன்றிய செயலாளர்கள் மன்னவன் சூலூர் தெற்கு, சிபி.கே.செந்தில்குமார் சூலூர் வடக்கு, மருத்துவர் ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் தேவி மன்னவன் சூலூர், செல்வராஜ் பள்ளபாளையம், முன்னாள் பொறுப்புத் தலைவர் செல்வராஜ், பேரூர் கழக செயலாளர்கள் கௌதமன் சூலூர், கபிலன் பள்ளபாளையம், வேலுச்சாமி சாமளாபுரம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் விஜயகுமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சிவப்பிரகாஷ், சூலூர் பேரூராட்சி துணைத் தலைவர் சோலை கணேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சாப்ரா உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.